"*2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"*2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

2021 பிப்ரவரி 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2021–2022, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.*

***திரு. S. செம்மலை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டைப் பற்றி நினைப்பவர்களுக்கு இது ஒரு நல்ல பட்ஜெட். அதைப்போல, மக்களைப்பற்றி சிந்திப்பவர்களுக்கு இது ஒரு மகத்தான பட்ஜெட். ஒருவேளை தங்களைப்பற்றி மட்டுமே எண்ணுபவர்களுக்கும், அதேபோல, சில கனவுலக சஞ்சாரிகளுக்கும் வேண்டுமானால் இந்த பட்ஜெட் ஒரு கேலிக்கூத்தாகவும், வாய்ப் பந்தலாகவும் இருக்குமே தவிர, மக்களைப் பொறுத்தவரையில், இது நன்மை பயக்கிற பட்ஜெட் ஆகத்தான் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.*

15–வது சட்டமன்ற நிறைவுக் கூட்டத்தொடரில் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இந்த இடைக்கால பட்ஜெட்டை, தனது 11–வது பட்ஜெட் ஆக இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். எதிர்காலத்திலே அதாவது, இந்த ஆண்டு பொதுத் தேர்தலுக்குப்